சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# கணக்கீடு – 33 தரம் - 13

## Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி

## தேர்ச்சி 14 – இருப்பு விலையிடல் முறைகள்

**Week : August 16 - 20** தயாரிப்பு : சஜித்.sp
**இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி** BBA(Financial Spl), University of Colombo

### இருப்பு விலையிடல் முறைகள் / இருப்புக் கிரயச் சமன்பாடுகள்

★ LKAS – 02 இருப்புத் தொடர்பான நியமத்தின்படி இருப்புக்களுக்கு விலையிடும் முறைகள்

**முதல் உள் முதல் வெளி முறை** (FIFO)

இம்முறையில் முதலாவதாகக் களஞ்சியசாலைக்குப் பெறப்படும் இருப்பானது முதலாவதாகக் களஞ்சியசாலையிலிருந்து விநியோகிக்கப்படும் என்ற கருதுகோள் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. இதற்கமைய இறுதியாகப் பெற்ற பொருள்களின் அளவே இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஆயினும், நடைமுறையில் முதலாவதாகப் பெற்ற பொருட்களை முதலாவதாக விநியோகிக்கும் தேவை இல்லாதிருப்பதுடன் முதலாவதாகப் பெற்ற பொருள்களின் விலையினை அடிப்படையாகக் கொண்டு விநியோகங்களின் பெறுமானம் கணிப்பிடப்படும்.

**நிறையளிக்கப்பட்ட சராசரி கிரய முறை** (WAC)

இம்முறையில் குறித்த திகதியில் களஞ்சியசாலையிலுள்ள இருப்புக்களின் நிறை இடப்பட்ட சராசரிப் பெறுமானம் பொருளின் விநியோக விலையாகத் தீர்மானிக்கப்படும். குறித்த திகதியிலுள்ள இருப்பின் மொத்தப் பெறுமதியினை இருப்பு அலகுகளின் எண்ணிக்கையினால் வகுப்பதன் மூலம் நிறையிட்ட சராசரி விலை கணிக்கப்படும்.

$$\text{நிறையளிக்கப்பட்ட சராசரி விலை} = \frac{\text{இருப்பின் மொத்தப் பெறுமதி}}{\text{இருப்பு அலகுகளின் எண்ணிக்கை}}$$

1. உற்பத்தி வணிகமொன்றின் மூலப்பொருள் RM – 1 தொடர்பாக 2021 ஜனவரி தொடர்பான தரவுகள் வருமாறு:
   - 01.01 இருப்பு அலகுகள் அலகொன்று ரூபா 10 படி 2 000 அலகுகள்
   - 01.04 கொள்வனவு அலகொன்று ரூபா 12 படி 5 000 அலகுகள்
   - 01.06 வழங்கல்கள் 3 000 அலகுகள்
   - 01.10 கொள்வனவு அலகொன்று ரூபா 15 படி 4 000 அலகுகள்
   - 01.15 வழங்கல்கள் 5 000 அலகுகள்
   - 01.21 கொள்வனவு அலகொன்று ரூபா 18 படி 10 000 அலகுகள்
   - 01.23 வழங்கல்கள் 8 000 அலகுகள்
   - 01.30 கொள்வனவு அலகொன்று ரூபா 20 படி 6 000 அலகுகள்

   **வேண்டப்படுவது:**

   முதல் உள் முதல் வெளி முறையில் (FIFO) களஞ்சியப் பேரேட்டினை தயாரிக்குக.

2. உற்பத்தி வணிகமொன்றின் மூலப்பொருள் MN தொடர்பாக 2021 மே மாதம் தொடர்பான தரவுகள்
   - 05.01 இருப்பு அலகுகள் அலகொன்று ரூபா 50 படி 1 000 அலகுகள்
   - 05.03 கொள்வனவு அலகொன்று ரூபா 55 படி 4 000 அலகுகள்
   - 05.08 வழங்கல்கள் 2 500 அலகுகள்
   - 05.12 கொள்வனவு அலகொன்று ரூபா 60 படி 6 000 அலகுகள்
   - 05.17 வழங்கல்கள் 6 500 அலகுகள்
   - 05.21 கொள்வனவு அலகொன்று ரூபா 75 படி 2 000 அலகுகள்
   - 05.24 வழங்கல்கள் 2 000 அலகுகள்
   - 05.31 கொள்வனவு அலகொன்று ரூபா 80 படி 3 000 அலகுகள்

   **வேண்டப்படுவது:**

   முதல் உள் முதல் வெளி முறையில் (FIFO) களஞ்சியப் பேரேட்டினை தயாரிக்குக.

Sajith.SP